**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 128/2024 |
| Prosecution Witness | : | **அ.சா.**1 |
| Name | : | **ஆனந்தன்** |
| Father's / Husband Name | : | **இளங்கோவன்** |
| Address | : | **கீழப்பெரம்பலூர், குன்னம் வட்டம்** |
| Age | : | 45/2025 |

**தேதி : 01.04.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. எதிரி ஆஜர் இல்லை.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு சொந்தமாக TN 46 Z 8962 என்ற Splender இருசக்கர வாகனம் உள்ளது. எனது உறவினர் உடல்நிலை சரியில்லாமல் பெரம்பலூர்அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். அவரை நான் பார்ப்பதற்காக கடந்த 16.07.2024 தேதி மதியம் 1.30 மணிக்கு பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு வந்து பிரசவ வார்டு அருகில் உள்ள புங்க மரத்தடியில் என்னுடைய இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு என்னுடைய உறவினரை பார்த்துவிட்டு திரும்ப மதியம் 3.00மணி அளவில் வந்து என்னுடைய வாகனத்தை பார்த்தபோது என்னுடைய வாகனம் காணவில்லை. காணாமல் போன என்னுடைய வாகனத்தை பல இடங்களில் தேடிபார்த்தேன் கிடைக்கவில்லை. மறுநாள் 17.07.2024ம் தேதி பெரம்பலூர் காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அதிலுள்ள

கையெழுத்து என்னுடையதுதான். **புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

அதன்பிறகு 5 நாட்கள் கழித்து காணாமல்போன என்னுடைய இருசக்கர வாகனம் கிடைத்துவிட்டதாக திருச்சியிலுள்ள மணிகண்டம் காவல் நிலையத்தில் இருந்து எனக்கு போன் மூலம் எனக்கு தகவல் சொன்னார். நானும் பெரம்பலூர் காவல் நிலையத்திலிருந்து ஒரு காவலரும் மணிகண்டம் காவல் நிலையத்திற்கு சென்று என்னுடைய இருசக்கர வாகனத்தை பெரம்பலூர் காவல் நிலையத்திற்கு எடுத்துவந்தோம். அதன்பிறகு நீதிமன்றத்தின் மூலம் மனு செய்து என்னுடைய இருசுக்கர வாகனத்தை நான் இடைக்கால பொறுப்பில் பெற்று சென்றேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள இருசக்கர வாகனம் என்னுடையதுதான். **புகைபடம் அ.சா.ஆ– 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

என்னுடைய புகாரில் என்னுடைய உறவினர் யாருக்கு உடல்நிலை சரியில்லை என்று அவருடைய பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பிரசவ வார்டு அருகில்தான் வண்டியை நிறுத்தியிருந்தேன் என்றால் சரிதான். புகாரில் என்ன எழுதியுள்ளது என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் முடியும். புகாரை வேறொருவர் எழுதினார். என்னுடைய வாகனத்தை யார் திருடிசென்றார்கள் என்று போலீஸார் என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். வாகனம் காணாமல் போன அன்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். மருத்துவமனைனயில் உள்ள கண்காணிப்பு கேமராவை பார்த்து என்னுடைய வாகனத்தை யார் எடுத்துசென்றார்கள் என்று போலீஸார் என்னிடம் சொன்னார்கள். கண்காணிப்பு கேமரா பதிவுகளை போலீஸார் வாங்கிசென்றார்களா என்றால் வாங்கிசென்றார்கள். என்னுடைய வாகனத்தை

யார் எடுத்துசென்றார்கள் என்று பக்கத்தில் உள்ளவர்கள் யாரும் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.